# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**விளம்பர எண்: 630**

**அறிவிக்கை எண் 26/2022** **நாள்: 15.09.2022**

**ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-III (தொகுதி-IIIA)** பணிகளில் அடங்கிய கீழ்க்காணும் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கான எழுத்துத் தேர்விற்கு **14.10.2022** அன்று வரை இணைய வழி மூலம் மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**எச்சரிக்கை**

- தேர்வாணையத்தின் தெரிவுகள் அனைத்தும் விண்ணப்பதாரரின் தர வரிசைப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.
- பொய்யான வாக்குறுதிகளைச் சொல்லி, தவறான வழியில் வேலை வாங்கித் தருவதாகக் கூறும் இடைத்தரகர்களிடம் விண்ணப்பதாரர்கள் மிகவும் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கப்படுகின்றனர்.
- இது போன்ற தவறான மற்றும் நேர்மையற்றவர்களால் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படும் எவ்வித இழப்புக்கும் தேர்வாணையம் எந்தவிதத்திலும் பொறுப்பாகாது.
- இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் அனைத்துத் தகவல்களுக்கும் விண்ணப்பதாரரே முழுப் பொறுப்பாவார். விண்ணப்பதாரர், தேர்விற்கு இணையவழியில் விண்ணப்பிக்கும்பொழுது, ஏதேனும் தவறு ஏற்படின், தாங்கள் விண்ணப்பித்த இணையச்சேவை மையங்களையோ, பொதுச் சேவை மையங்களையோ குற்றம் சாட்டக் கூடாது. விண்ணப்பதாரர் பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்கும் முன்னர், உரிய சான்றிதழ்களுடன் **[பிற்சேர்க்கை-II-இல் காண்க]** நன்கு சரிபார்த்த பின்னரே சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.
- விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது அவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட அனைத்து உரிமை கோரல்களுக்கும் / விவரங்களுக்கும் ஆதாராமாக உரிய சான்றிதழ்களை / ஆவணங்களை கட்டாயமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தில் தேவையான சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் இந்த நேரடி நியமனத்திற்கு இணையவழி மூலம் விண்ணப்பிக்கும் முன் இந்த அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்/ வழிமுறைகள்/ வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் தேர்வாணையத்தின் "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறைகள்" ஆகியவற்றை நன்கு படிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதுத் தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருப்பின் தேர்வாணையத்தின் தொலைப்பேசி மற்றும் மின்னஞ்சல் மூலமாக போதிய கால அவகாசத்திற்கு முன்னர் தெளிவுபடுத்திக்கொள்ளலாம். மேலும் விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**1. ஒரு முறைப் பதிவு:**

விண்ணப்பதாரர்கள் பதிவுக்கட்டணமாக **ரூ.150/-**ஐ (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்) செலுத்தி தங்களது அடிப்படை விவரங்களை இணையவழி நிரந்தரப்பதிவு மூலமாக (OTR) கட்டாயமாக பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்த நிரந்தர பதிவு முறையில் பதிவு செய்த விண்ணப்பங்கள் பதிவு செய்த நாளிலிருந்து 5 வருட காலங்களுக்கு

செல்லத்தக்கதாகும். அதன் பிறகு உரிய பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஒரு முறைப் பதிவானது எந்த ஒரு பதவிக்கான விண்ணப்பமாக கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரர் தேர்வு எழுத விரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும் தனித்தனியே இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும். ஒரு முறைப் பதிவுக்கான பதிவுக் கட்டணம் இந்த நியமனத்திற்கான விண்ணப்பம் / தேர்வுக் கட்டணம் அல்ல. விண்ணப்பதாரர்கள் இத்தேர்வுக்கான நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். விண்ணப்பதாரர் தங்களுடைய ஒரு முறைப் பதிவுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும்.

[மேலும் விவரங்களுக்கு “விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்” பத்தி-2(B) & 2(C)-ஐ காண்க]

## 2. காலிப்பணியிடங்கள் பற்றிய விவரங்கள்:

| பதவியின் பெயர் மற்றும் பதவிக்குறியீட்டு எண் | பணியின் பெயர் மற்றும் பணிக்குறியீட்டு எண் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்ற முறை |
|---|---|---|---|
| **கூட்டுறவு சங்கங்களில் இளநிலை ஆய்வாளர், கூட்டுறவுத் துறை (குறியீட்டு எண் 1095)** | **தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப் பணி** | **14** | **ரூ. 20,600 – 75900 (நிலை-10)** |
| **பண்டக காப்பாளர், நிலை – II, தொழில் மற்றும் வர்த்தகத் துறை (குறியீட்டு எண் 1098)** | **தமிழ்நாடு அமைச்சுப்பணி** | **1** | |

குறிப்பு:
அறிவிக்கபட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். இவை மாற்றத்துக்கு உட்பட்டதாகும்
[விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 11-A-ஐ காண்க].

## 3. காலிப்பணியிடங்களுக்கான பகிர்மானப் பட்டியல்:

**இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும்.**

| பதவியின் பெயர் | பொது.பி (பொ.) | பொது.பி (பொ.) (த.வ.க.) | பொது.பி (பெ.) | பொது.பி (பெ.) (ஆ.வி) | பி.வ. (இ.ஒ) (பொ.) (த.வ.க.) | பி.வ. (இ.ஒ) (பொ.) (மு.இ) | பி.வ. (இ.ஒ) (பெ.)(த.வ.க.) | மி.பி.வ/சீ.ம (பொ.) | மி.பி.வ/சீ.ம (பெ.) | ஆ.தி. (பொ.) | ஆ.தி. ( பெ.) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கூட்டுறவு சங்கங்களில் இளநிலை ஆய்வாளர், கூட்டுறவுத் துறை | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | **14** |
| பண்டக காப்பாளர், நிலை – II, தொழில் மற்றும் வர்த்தகத் துறை | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | **1** |

**விரிவாக்கம்:**

**பொது.பி-பொதுப்பிரிவு; பி.வ (இ.அ) - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதவர்); மி.பி.வ./சீ.ம.–மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், ஆ.தி.–ஆதிதிராவிடர்**

**[பொ.-பொது; த.வ.க.-தமிழ்வழியில் கல்வி பயின்றோர்; பெ.-பெண்கள்; ஆ.வி.-ஆதரவற்ற விதவை, மு.இ.-முன்னாள் இராணுவத்தினர்]**

## 4. முக்கியமான நாட்கள் மற்றும் நேரம்:

| | | | |
|---|---|---|---|
| அ | அறிவிக்கை நாள் | 15.09.2022 | |
| ஆ | இணைய வழி மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்குரிய இறுதி நாள் | 14.10.2022 | |
| இ | இணையவழி விண்ணப்பம் திருத்தம் செய்வதற்கான காலம் | 19.10.2022<br>நள்ளிரவு 12.01 முதல் | 21.10.2022<br>இரவு 11.59 வரை |
| எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | | | |
| **A.** கட்டாயத் தமிழ் மொழித் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு / பொது ஆங்கிலம்<br>**B.** பொது அறிவு | | 28.01.2023 | காலை<br>9.30 மு. ப. முதல்<br>12.30 பி. ப. வரை |

**குறிப்பு:**

(i) விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தினைச் சமர்பிப்பதற்கான கடைசி தேதி வரை தங்களது இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும் திருத்தம் செய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ii) விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தில் கவனக் குறைவு காரணமாக தவறுகள் / பிழைகள் மற்றும் தவறான தகவல்கள் அளித்திருந்தால் விண்ணப்பம் திருத்தம் செய்வதற்கான கால இடைவெளியில், சரியான தகவலைக் கொடுத்து விண்ணப்பத்தினைத் திருத்தம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். விண்ணப்பம் திருத்தம் செய்வதற்கான காலம் முடிந்த பிறகு எந்த ஒரு தகவலையும் திருத்தம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், இது தொடர்பான எந்த ஒரு கோரிக்கைகளும் கவனிக்கப்படமாட்டாது.

(iii) தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த தவறிய விண்ணப்பதாரர்கள் இக்காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தலாம்.

(iv) இத்தேர்வின் செயல்பாடுகளுக்கான தோராய காலநிர்ணயம் தொடர்பாக **பிற்சேர்க்கை– IV**-ஐ காண்க.

(v) விண்ணப்பதாரர் இந்த நியமனத்திற்கு ஒரே ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்பிப்பிக்க வேண்டும்.

## 5. தகுதிகள்:

(அ) வயது வரம்பு **[01.07.2022** அன்றுள்ளபடி**]**

**(1) கூட்டுறவு சங்கங்களில் இளநிலை ஆய்வாளர், கூட்டுறவுத் துறை**

| வ. எண். | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (நிறைவடைந்திருத்தல் வேண்டும்) | அதிகபட்ச வயது (நிறைவடைந்திருத்தல் கூடாது) |
|---|---|---|---|
| 1. | ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | **18 வயது** | **37*** வயது |
| | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதவர்) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | | **34*** வயது |
| | "ஏனையோர்" | | **32*** வயது |

| | | | |
|---|---|---|---|
| 2. | War service candidate and has undergone a course of training for nine months in one of the Co-operative Training Institute in the State and has passed Examination in Co-operation, Auditing, Banking and Book-keeping conducted by the Tamil Nadu Co-operative Union. | | |
| | ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | **18 வயது** | **47*** வயது |
| | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதவர்) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | | **44*** வயது |
| | “ஏனையோர்” | | **42*** வயது |

No Maximum Age limit for applicants belonging to Scheduled Castes / Scheduled Castes (Arunthathiyar), Scheduled Tribes, Most Backward Classes / Denotified Communities, Backward Classes (Other than Backward Class Muslims), Backward Classes (Muslims) and Destitute Widows of all Castes who possess an Educational qualification higher than the Minimum General Educational Qualification. For this purpose, a pass in the Pre-University Examination / Higher Secondary Course and above will be deemed to be a qualification higher than the Minimum General Educational Qualification.

**(2) பண்டக காப்பாளர், நிலை – II, தொழில் மற்றும் வர்த்தகத் துறை**

| வ. எண். | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (நிறைவடைந்திருத்தல் வேண்டும்) | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதவர்) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | **18 வயது** | **வயது வரம்பு இல்லை** |
| | “ஏனையோர்” | | **32*** வயது **நிறைவடைந்தவராக இருத்தல் கூடாது** |

***அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 13.09.2021-இன் படி நேரடி நியமனத்திற்கான வயது உச்ச வரம்பு 2 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது.**

குறிப்பு:-

(i) ஆ.தி., ஆ.தி(அ)., ப.ப., மி.பி.வ. / சீ.ம., பி.வ.(இ.அ) மற்றும் பி.வ.(இ) ஆகிய வகைகளைச் சார்ந்தோர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோர் குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட கல்வித் தகுதியைப் பெற்றிருப்பின் அதாவது புகுமுக வகுப்பு / மேல்நிலைப்பள்ளி / பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உச்ச வயது வரம்பு இல்லை.

(ii) ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ., / சீ.ம., மற்றும் பி.வ., தவிர"ஏனையோர்" மாநில, மத்திய அரசில் ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டு முறையான பணியில் பணிபுரிந்து வருபவர் இப்பதவிக்குரிய வயது வரம்பிற்குள் இருந்தாலும், இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள். விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 3(F)-ஐக் காண்க.

[**தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள்** (**பணி** நிபந்தனைகள்) **சட்டம் 2016**, **பிரிவு 3(r)-இல் குறிப்பிட்டுள்ளவாறு**]

(iii) விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 5-இல் குறிப்பிடப்பட்டுள்ள வயது வரம்புச் சலுகை அதிகபட்ச வயதிற்கு மட்டும் பொருந்தும்.

**வயது வரம்புச் சலுகை:**

**(i) நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுகளுடைய மாற்றுத்திறனாளிகள்:**

நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்புச் சலுகை பெறத் தகுதியுடையவராவார்கள்

**[தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 64-இல் குறிப்பிட்டுள்ளவாறு]**

**(ii) முன்னாள்இராணுவத்தினர்:**

**அ**) ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ., / சீ.ம., மி.பி.வ., பி.வ.(இ.அ) மற்றும் பி.வ.(இ) வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு (குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதி வரை மட்டும் பயின்றோருக்கு) **55** வயது வரை சலுகை வழங்கப்படும் (கூட்டுறவு சங்கங்களில் இளநிலை ஆய்வாளர், கூட்டுறவுத் துறை பதவிக்கு மட்டும்).

**ஆ**) ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ., / சீ.ம., மி.பி.வ., பி.வ.(இ.அ) மற்றும் பி.வ.(இ) தவிர ஏனைய வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு **50** வயது வரை சலுகை வழங்கப்படும்.

[**தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள்** (**பணி நிபந்தனைகள்**) **சட்டம் 2016**, **பிரிவு 63-ல் குறிப்பிட்டுள்ளவாறு மற்றும் அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 13.09.2021-இன்படி]**

**இ)** ஏற்கனவே ஏதேனும் ஒரு பிரிவு / பணி / பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெறமுடியாது.

[**"விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்" உள்ள பத்தி 3(F) மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 3(j)- ஐ காண்க]**

**மேலும் விவரங்களுக்கு விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 3(F) மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 3(r)-ஐ காண்க.**

**விளக்கம்**:

"உச்ச வயது வரம்பு இல்லை" என்றால் விண்ணப்பதாரர் விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்றோ / பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட நாளன்றோ மற்றும் பதவியில் அமர்த்தப்பட்ட நாளன்றோ **60** வயதினை பூர்த்தி செய்திருக்கக் கூடாது.

ஆ) கல்வித் தகுதி: **[15.09.2022** அன்றுள்ளபடி**]**

விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகுதியினை அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதியினைப் பெற்றிருக்கவேண்டும்.

| Name of the Post (1) | Educational Qualification (2) | Preferential Qualification (3) |
|---|---|---|
| **Junior Inspector of Co-operative Societies in Co-operative Department** | **<u>For SCs, SC(A)s, STs, MBCs/DCs, BC(OBCM)s, BCMs</u>**<br>**Minimum General Educational Qualification (i.e., S.S.L.C.)**<br>**Or**<br>**The certificate of eligibility for College course of studies in the Madras, Madurai and Annamalai Universities issued by the Board of Secondary Education or by any other competent authority.**<br><br>**<u>For Others</u>**<br>**A pass in the Intermediate Examination or a pass in the Pre-University Examination of any University or Institutions recognised by the University Grants Commission for the purpose of its financial grant.** | **Provided that other things being equal, preference shall be given to the candidates possessing such qualifications and in such order as specified below: -**<br>**(1) A degree in Commerce;**<br>**Or**<br>**(2) Higher Diploma in Co-operative Management awarded by the Natesan Institute of Co-operative Management, Madras or Institute of Co-operative Management, Madurai.** |
| **Store-Keeper, Grade-II in Industries and Commerce Department** | **Must have passed the Pre-University Or Higher Secondary Examination** | **---** |

<u>குறிப்பு</u>:

(i) தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 25-ல் குறிப்பிட்டுள்ளவாறு இத்தெரிவிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித்தகுதியினை / உயர் கல்வித்தகுதியினை முறையே **10ஆம் வகுப்பு + 12ஆம் வகுப்பு அல்லது இணைக்கல்வித் தகுதி + இளங்கலையில் பட்டம்** என்று பெற்றிருக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட மற்றும் முன்னுரிமை அளிக்கப்படும் கல்வித் தகுதியினை இவ்வறிவிக்கையின் நாளன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும். [**தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள்** (**பணி நிபந்தனைகள்**) **சட்டம் 2016, பிரிவு 20(4)(iv)-இல் குறிப்பிட்டுள்ளவாறு**].

(ii) நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிக்கு இணையான கல்வித் தகுதியினை கோரும் விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட கல்வித் தகுதி இணையானது என்பதற்கான சான்றை அரசாணையாக இவ்வறிவிக்கை தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும். மேலும், அவ்வரசாணையினை இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு பதிவேற்றம் செய்ய தவறும் நிலையில் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் உரிய வழிமுறைகளை பின்பற்றி நிராகரிக்கப்படும். அறிவிக்கையின் தேதிக்குப் பின்னர் இணையான கல்வித் தகுதி என வழங்கப்பட்ட அரசாணை ஏதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் விவரங்களுக்கு **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 9 மற்றும் அறிவிக்கையில் இணைக்கப்பட்டுள்ள "ஏற்றுக்கொள்ள மறுத்தல்" (Disclaimer) காண்க**].

**(இ)** உடற்தகுதி சான்றிதழ்:

பணி நியமனதிற்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள தரத்தில் உடற்தகுதிச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும். மாதிரி படிவம் அறிவிக்கையின் **பிற்சேர்க்கை-III**-இல் இணைக்கப்பட்டுள்ளது. இச் சான்றினை தெரிவு செய்யப்பட்ட தேர்வர், தனது நியமன அலுவலரிடம் பணியில் சேரும் போது சமர்பிக்க வேண்டும்.

| பதவியின் பெயர் | நிர்ணயிக்கப்பட்டுள்ள பார்வையின் தரம் | உடற்தகுதி சான்றிதழ் படிவம் |
|---|---|---|
| **கூட்டுறவு சங்கங்களில் இளநிலை ஆய்வாளர், கூட்டுறவுத் துறை** | **பார்வை தரம் – III** | **செயலாட்சிப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவம்.** |
| **பண்டக காப்பாளர், நிலை – II, தொழில் மற்றும் வர்த்தகத் துறை** | **பார்வை தரம் – III அல்லது அதற்கு மேம்பட்ட தரம்** | **தமிழ்நாடு அமைச்சுப்பணி / தமிழ்நாடு நீதி அமைச்சுப்பணி / தமிழ்நாடு தலைமைச் செயலகப்பணி பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவம்.** |

தெரிவிற்கு வரும் கண்பார்வை குறைபாடுடைய விண்ணப்பதாரர்கள் தகுதி வாய்ந்த அரசு கண் மருத்துவ நிபுணரிடம் (Specialist) கண்பார்வைத் தகுதிச் சான்றிதழைப் பெற்று நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) தமிழ் மொழியறிவு:

விண்ணப்பதாரர்கள் போதுமான தமிழ் மொழியறிவு பெற்றிருக்க வேண்டும். [**மேலும் விவரங்களுக்கு** "**விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்**" **உள்ள பத்தி** 14(I)-**ஐ காண்க**]

**6. கட்டணம்:**

| | | |
|---|---|---|
| **அ**) | <u>பதிவுக் கட்டணம்</u><br>**நிரந்திரப் பதிவுக்கட்டணம் [**(**அ.ஆ**(**நி**) **எண்**.32, **பணியாளர்** (**ம**) **நிர்வாக சீர்திருத்தத்துறை**, **நாள்** 01.03.2017-**இன் படி]**<br><br>**<u>குறிப்பு</u>** :<br>நிரந்தர பதிவில் பதிவு செய்த நாளிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவுறாத விண்ணப்பதாரர்கள், இத்தேர்வுக்கான பதிவுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர் | **ரூ.150/-** |
| **ஆ**) | <u>தேர்வுக் கட்டணம்</u><br>கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுக்கட்டணச் சலுகை பெற தகுதியுடையவர்களைத் தவிர பிற விண்ணப்பதாரர்கள், இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போது தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டும். | **ரூ.100/-** |

**<u>தேர்வுக் கட்டணச் சலுகை:</u>**

| வகை | சலுகை |
|---|---|
| **1. ஆதிதிராவிடர்/ ஆதிதிராவிடர்(அருந்ததியர்)** | **கட்டணம் செலுத்தத் தேவையில்லை.** |
| **2. பட்டியல் பழங்குடியினர்** | **கட்டணம் செலுத்தத் தேவையில்லை.** |
| **3. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர்** | **மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.** |

| | | |
|---|---|---|
| **4.** | **இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்** | **மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.** |
| **5.** | **முன்னாள் இராணுவத்தினர்** | **இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.** |
| **6.** | **நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் (இயலாமையின் அளவு 40% மற்றும் அதற்கு மேலும்)** | **கட்டணம் செலுத்தத் தேவையில்லை.** |
| **7.** | **ஆதரவற்ற விதவைகள் (ஆதரவற்ற விதவை சான்றிதழ் வருவாய் கோட்ட அலுவலர் / துணை ஆட்சியர் / சார் ஆட்சியரிடமிருந்து பெறப்பட வேண்டும்.)** | **கட்டணம் செலுத்தத் தேவையில்லை.** |

குறிப்பு:

1. முந்தைய விண்ணப்பங்களில் கோரப்பட்ட கட்டணச் சலுகைகளின் அடிப்படையில், மொத்த தேர்வுக்கட்டண இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.
2. விண்ணப்பதாரர் பெறும் இலவச கட்டணச் சலுகை வாய்ப்புகளின் எண்ணிக்கையானது தெரிவின் எந்நிலையிலும் தேர்வாணையத்தால் சரிபார்க்கப்படும்.
3. விண்ணப்பதாரர் தம்முடைய முந்தைய விண்ணப்பங்களில் கோரப்பட்ட கட்டணச் சலுகை தொடர்பான தகவல்களை மறைத்து விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து கட்டணவிலக்குத் தவறாகக் கோரும் பட்சத்தில், அவருடைய விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பதாரர் தேர்வுக்கட்டண விலக்கு தொடர்பான இலவச சலுகையைப் பெறுவதற்கு இணையவழி விண்ணப்பத்தில் "ஆம்" அல்லது "இல்லை" என்ற விருப்பங்களை கவனமாகத் தேர்வு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.
5. விண்ணப்பதாரர், தங்களது தன் விவரப்பக்கத்தின் **Application History**-ல் தோன்றும் தகவல்களைப் பொருட்படுத்தாமல் தேர்வுக்கட்டணச் சலுகை இதுவரை எத்தனை முறைபயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை தாங்கள் சுயமாகக் கணக்கிட்டு வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.
6. கட்டணச்சலுகை கோரி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பமானது விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையிலிருந்து ஒருவாய்ப்பு குறைக்கப்பட்டதாகக் கருதப்படும்.
7. அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச இலவசவாய்ப்புகளை ஏற்கனவே பயன்படுத்திக் கொண்ட விண்ணப்பதாரர் / தேர்வுக்கட்டணச் சலுகையை பெற விரும்பாத விண்ணப்பதாரர் / தேர்வுக்கட்டணச் சலுகை பெற தகுதியற்ற விண்ணப்பதாரர் தேர்வுக்கட்டணச் சலுகை தொடர்பான கேள்விக்கு "இல்லை" என்ற விருப்பத்தினை தெரிவு செய்து நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக்கட்டணம் செலுத்தும் முறை மூலம் உரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.
8. விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக்கட்டணத்துடன் குறித்த நேரத்திற்குள் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கவில்லையென்றால், விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.

[மேலும் தேர்வுக் கட்டணச் சலுகை தொடர்பான விவரங்களுக்கு **விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்" உள்ள பத்தி 6-ஐ காண்க]**

**7. தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை:**

i. தேர்வுக் கட்டணம் ரூ.100/-ஐ (ரூபாய் நூறு மட்டும்) இணையவழியில் (இணைய வங்கி, பற்று அட்டை, கடன் அட்டை) விண்ணப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளிற்குள் செலுத்த வேண்டும். இந்த அறிவிப்பின் பத்தி 4-இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத் திருத்தம் செய்யும் காலத்திலும் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தலாம்.

ii. விண்ணப்பதாரர்கள் உரிய சேவைக் கட்டணமும் சேர்த்து செலுத்த வேண்டும்.

iii. விண்ணப்பதாரர்களின் கட்டணச் சலுகைக்கான தகுதியின் அடிப்படையில்தான் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு பெற முடியும்.

iv. இணையவழியில் தேர்வுக் கட்டணம் செலுத்தாமல், நேரடியாக செலுத்தும் வரைவு காசோலை/ அஞ்சல் ஆணை போன்றவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவர்கள் செலுத்திய கட்டணமும் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

v. இணைய வழியில் தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் தோல்வி அல்லது கட்டணத்தை வங்கிகள் ஒத்திசைவு செய்வதற்கு தாமதம் ஆகியவற்றிற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது. விண்ணப்பதாரர் செய்த பணப் பரிமாற்றம் வெற்றிகரமாக இருப்பதை உறுதி செய்வது அவர்களின் பொறுப்பாகும்.

[**தேர்வு கட்டணம் தொடர்பாக "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்" பத்தி** – 2(V)-**ஐ காண்க**]

**8. சலுகைகள்:**

i. ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதவர்), பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்), ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர், நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கான கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் "**விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 6-ஐ காண்க**.

ii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சலுகையை கோரும் விண்ணப்பதாரர்கள் அதற்குரிய சான்றிதழ் ஆதாரங்களை இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும். பதிவேற்றம் செய்யத் தவறினால் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.

குறிப்பு :

**முன்னாள் இராணுவத்தினர், ஏதேனும் ஒரு பிரிவு / பணியில் அடங்கிய பதவிக்கு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், பின்னர், வேறு எந்த நியமன நிகழ்வுகளிலும் "முன்னாள் இராணுவத்தினர்" என்ற சலுகையைக் கோர முடியாது**. [தமிழ்நாடு அரசுப் **பணியாளர்கள்** (**பணி** நிபந்தனைகள் **சட்டம்** 2016 **பிரிவு** 3(j) **ல் குறிப்பிட்டுள்ளவாறு**]

## 9. தேர்வுத் திட்டம் (கொள்குறி வகை) (OMR Method) :

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | அனைத்து பிரிவினருக்கும் தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| **பகுதி - அ @**<br>**கட்டாயத் தமிழ் மொழித் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு**<br>**(பத்தாம் வகுப்புத் தரம்)**<br>**100 வினாக்கள் / 150 மதிப்பெண்**<br>-----------------------------------------<br>**பொது ஆங்கிலம்**<br>**(பத்தாம் வகுப்புத் தரம்)**<br>**100 வினாக்கள் / 150 மதிப்பெண்** | **3 மணி நேரம்** | **150*** | **90** |
| **பகுதி - ஆ**<br>**பொது அறிவு (75 வினாக்கள்)**<br>**( மேல்நிலை வகுப்புத் தரம்)**<br>**மற்றும்**<br>**திறனறிவுத் தேர்வு (25 வினாக்கள்)**<br>**(பத்தாம் வகுப்புத் தரம்)**<br>**100 வினாக்கள் / 150 மதிப்பெண்** | | **150** | |
| **மொத்தம்** | | **300** | |

* பகுதி 'அ'-வில் குறைந்தபட்ச மதிப்பெண் - **60** [**அதாவது 150-இல்** 40% **மதிப்பெண்கள்**] **பெற வேண்டும்**.

@ அரசாணை (நிலை) எண் 49, மனிதவள மேலாண்மைத் (எம்) துறை, நாள் 23.05.2022-இன் படி மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் **பகுதி–அ "கட்டாயத் தமிழ்மொழி தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்)"** எழுதுவதிலிருந்து விலக்கு பெறலாம். அவ்வாறு விலக்கு கோரும் விண்ணப்பதார்கள் இணையவழி விண்ணப்பத்தில் உரிய தகவல்களை தவறாமல் அளிக்க வேண்டும். அதற்கு பதிலாக அவர்கள் பொது ஆங்கிலத்தை **(பத்தாம் வகுப்புத் தரம்)** தேர்வு செய்ய வேண்டும். இது குறித்து பின்னர் கோரப்படும் எவ்விதமான கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்விலக்கு கோரும் மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் அரசாணை (நிலை) எண் 8, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள் 21.09.2021-இல் உள்ளவாறு உரிய சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும். [மாதிரி படிவம் அறிவிக்கையின் **பிற்சேர்க்கை II-இல்** தெரிவிக்கப்பட்டுள்ளது].

குறிப்பு:

(i) பகுதி 'அ'-வில் குறைந்தபட்ச மதிப்பெண் [40% - அதாவது 60 மதிப்பெண்கள்] பெற்றால் மட்டுமே தேர்வர்களின் பகுதி-ஆ மதிப்பீடு செய்யப்படும்.

(ii) பகுதி-அ மற்றும் பகுதி-ஆ- இல் பெறும் மொத்த மதிப்பெண்கள் தர நிர்ணயத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

(iii) பகுதி -அ (**கட்டாயத் தமிழ்மொழி தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு)** தமிழில் மட்டும் அமைக்கப்படும். பொது ஆங்கிலம் தேர்வு ஆங்கிலத்தில் மட்டும் அமைக்கப்படும். பகுதி 'ஆ' விற்கான வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அமைக்கப்படும்.

(iv) மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கான பாடத்திட்டம் இவ்வறிக்கையின் பிற்சேர்க்கை-I மற்றும் தேர்வாணையத்தின் இணையதளத்திலும் உள்ளன.

(v) தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து **விண்ணப்பதாரர்களின் விதிமுறையில் பத்தி** 17-ஐ **காண்க**.

**10. தெரிவு முறை:**

எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதியான விண்ணப்பதாரர்களின் உத்தேசப் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும். ஏற்கனவே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள சான்றிதழ்களின் சரிபார்ப்பிற்கு பின்னர் தகுதியான விண்ணப்பதாரர்கள், இட ஒதுக்கீட்டு கொள்கை அவர்கள் சார்ந்த பிரிவு, காலிப்பணியிடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களின் தரவரிசையின்படி மூலச்சான்றிதழ்களின் சரிபார்ப்பிற்குப் பின்னர் கலந்தாய்வில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்

[**"விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 18-C-ஐ காண்க.**]

**11. தேர்வு மையங்கள்:**

**எழுத்துத்தேர்வு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மையங்களில் நடைபெறும்.**

| மையம் | மையக் குறியீடு | மையம் | மையக் குறியீடு | மையம் | மையக் குறியீடு |
|---|---|---|---|---|---|
| அரியலூர் | 3001 | மதுரை | 1001 | தேனி | 2001 |
| செங்கல்பட்டு | 3301 | மயிலாடுதுறை | 3801 | திருவள்ளூர் | 2101 |
| சென்னை | 0101 | நாகப்பட்டினம் | 1101 | திருவண்ணாமலை | 2201 |
| கோயம்புத்தூர் | 0201 | நாமக்கல் | 1201 | திருவாரூர் | 2301 |
| கடலூர் | 0301 | பெரம்பலூர் | 1401 | தூத்துக்குடி | 2401 |
| தர்மபுரி | 0401 | புதுக்கோட்டை | 1501 | திருச்சிராப்பள்ளி | 2501 |
| திண்டுக்கல் | 0501 | இராமநாதபுரம் | 1601 | திருநெல்வேலி | 2601 |
| ஈரோடு | 0601 | இராணிப்பேட்டை | 3501 | திருப்பத்தூர் | 3701 |
| கள்ளக்குறிச்சி | 3401 | சேலம் | 1701 | திருப்பூர் | 3201 |
| காஞ்சிபுரம் | 0701 | சிவகங்கை | 1801 | வேலூர் | 2701 |
| நாகர்கோவில் | 0801 | தென்காசி | 3601 | விழுப்புரம் | 2801 |
| கரூர் | 0901 | தஞ்சாவூர் | 1901 | விருதுநகர் | 2901 |
| கிருஷ்ணகிரி | 3101 | உதகமண்டலம் | 1301 | | |

**குறிப்பு:**

i. விண்ணப்பதாரர் தேர்வு எழுதுவதற்கு மேலே உள்ள ஏதேனும் இரண்டு மையங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு இந்த இரண்டு மையங்களில் ஏதேனும் ஒன்றில் தேர்வு மையம் ஒதுக்கப்படும். இருப்பினும், 40% மற்றும் அதற்கு மேலும் இயலாமை அளவு கொண்ட மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் ஒரு மையத்தை தேர்வு செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.
[மேலும் விவரங்களுக்கு விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் 2 (R)-ஐ காண்க)

ii. தேர்வு மையங்களை மாற்றக் கோரும் கோரிக்கை பரிசீலிக்கப்படமாட்டாது. (மேலும் விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் 17(A) (ii)" ஐ காண்க)

iii. தேர்வு மையங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ / குறைக்கவோ, விண்ணப்பதாரர்களை வேறு மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யவோ தேர்வாணையத்திற்கு உரிமையுண்டு.

iv. எழுத்துத் தேர்வு / சான்றிதழ் சரிபார்ப்பு/ கலந்தாய்வு ஆகியவற்றில் பங்கேற்க விண்ணப்பதாரர்கள் தங்களது சொந்த செலவில் வரவேண்டும்.

**12. (அ) பணி விவரங்கள்:**

**தடையின்மை சான்றிதழ் / துறைத் தலைவருக்கு தகவல் தெரிவித்தல்**

விண்ணப்பதாரர், இணைய வழியில் விண்ணப்பிக்கும்போது, இந்திய அரசின் அல்லது இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசின் பணியில் அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது இந்திய அரசின் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் அரசு சார்புள்ள நிறுவனங்கள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் நிரந்தரப் பணியில் அல்லது தற்காலிகப் பணியில் இருப்பின் தங்களது விண்ணப்பங்களை

துறைத்தலைவர் வாயிலாகவோ அல்லது தாம் வகித்து வரும் பதவிக்கு நியமனம் செய்வதற்கு தகுதி பெற்ற அலுவலர் மூலமாகவோ அல்லது தாம் பணிபுரியும் அலுவலகத்தின் தலைவர் மூலமாகவோ அனுப்பத் தேவையில்லை மாறாக, தமது துறைத் தலைவருக்கு, தாம் தேர்வாணையத்தின் எந்த தேர்வுக்கு விண்ணப்பிக்கிறார் என்பதை எழுத்து மூலம் தெரிவித்து, தெரிவாகும் பட்சத்தில் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

**[மேலும் விவரங்களுக்கு விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 14(P)- இல் குறிப்பிட்டுள்ளவாறு]**

**ஆ) குற்றவியல் வழக்குகள் / ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான உறுதிமொழி:**

i. விண்ணப்பதாரருக்கு எதிராக தொடங்கப்பட்ட / நிலுவையில்லுள்ள அல்லது முடிக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் / குற்றவியல் நடவடிக்கைகள், கைது, விடுவிப்பு, ஏதேனும் இருப்பின் அந்த தகவல்களை தேர்வாணையத்திற்கு இணைய வழி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும்போது தெரிவித்தல் வேண்டும்.

ii. இணையவழி விண்ணப்பத்தில் நிலுவையிலுள்ள குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றி தெரிவித்துள்ள விண்ணப்பதாரர், அது தொடர்பான முதல் தகவல் அறிக்கையின் நகலை / குற்றக் குறிப்பாணை / காரணம் கேட்கும் குறிப்பாணையின் நகலை (நேர்வுக்கேற்ப) **கண்டிப்பாக இணையவழி விண்ணைப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.** தவறினால் விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.

iii. விண்ணப்பதாரர், தங்கள் மீதான குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றத் தீர்ப்பு / ஒழுங்கு நடவடிக்கைகளில் தண்டனை விதிக்கப்பட்டது தொடர்பாக தங்களது இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், கோரும் பொழுது தொடர்புடைய நீதிமன்ற ஆணை அல்லது விடுவிக்கப்பட்ட ஆணை அல்லது ஒழுங்கு நடவடிக்கை சார்ந்த குறிப்பாணையினை **கண்டிப்பாக இணையவழி விண்ணைப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.** மேற்குறிப்பிட்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்ய தவறும் நிலையில் விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.

iv. தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பித்த பிறகோ அல்லது இணைய வழி விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்த பிறகோ, நியமனம் தொடர்பான பணிகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன் வரை உள்ள தெரிவு பணிகளின் எந்த ஒரு நிலையின் போதும் விண்ணப்பதாரர் மீது, ஏதேனும் குற்றவியல் வழக்கு பதியப்பட்டிருந்தாலோ / ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ, அவர் குற்றத்தீர்ப்பு / தண்டணை ஏதும் பெற்றிருந்தாலோ, தேர்வாணையத்தால் ஆவணங்களைப் பதிவேற்றம் / சமர்ப்பிக்கக் கோரும் நிலையில், விண்ணப்பதாரர்கள் அது குறித்த உண்மை விவரங்களை, தேர்வாணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். மேலும், இந்த அறிவுரையினை கடைபிடிக்கத் தவறினால் அத்தகைய விண்ணப்பதாரர்களுடைய விண்ணப்பம் தேர்வாணையத்தால் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படுவதுடன் ஓராண்டுக்கு தேர்வு எழுதுவதிலிருந்தும் விலக்கி வைக்கப்படுவர். [**விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் 14(S) உள்ளவாறு**]

மேற்கூறிய அறிவுறுத்தலில் ஏதேனும் விதி மீறப்பட்டால் அவர்களது விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.

**13. பொதுவான தகவல்கள்:**

(A) இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும்.

(B) **தமிழ்வழிக் கல்வி மூலம் படித்த நபர்களுக்கான முன்னுரிமை**
**(இதற்கான காலிப்பணியிடம் உருவாகும் நிலையில்)**

i. மாநிலத்தின் கீழ் உள்ள பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யும் (திருத்த) சட்டம் 2020-ன்பிரிவு 2 (d)- இல் சொல்லப்படுவதாவது:

**தமிழ்வழியில் படித்த நபர் என்றால், மாநிலத்தில் நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படும் பதவிகளுக்கான சிறப்பு விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட கல்வித்தகுதி வரை தமிழ்வழியில் படித்தவராவார்.**

ii. தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான உரிமைகோரும் விண்ணப்பதாரர்கள், அதற்கான சான்றாவணமாக, பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மாற்றுச் சான்றிதழ் / தற்காலிகச் சான்றிதழ்/ பட்டச் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல் / நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை விண்ணப்பதாரர் தமிழ்வழியில் பயின்றுள்ளார் என பதிவுசெய்யப்பட்டு, குழுமம் அல்லது பல்கலைக்கழகம் அல்லது கல்வி

நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பட்டச் சான்றிதழினை **இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

iii. விண்ணப்பதாரர்கள், நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி வரைக்கும் அனைத்துக்கல்வித் தகுதியினையும் தமிழ்வழியில் பயின்றுள்ளார் என்பதற்கு ஆதாரமான சான்றுகளை கட்டாயம் இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**உதாரணம் :**

**ஒரு பதவிக்கு பத்தாம் வகுப்பு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியாக இருப்பின், விண்ணப்பதாரர் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கட்டாயம் தமிழ்வழியில் பயின்றிருக்க வேண்டும்.**

iv. தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான சான்றாவணம் எதுவும் இல்லையெனில், கல்வி நிறுவனத்தின் முதல்வர் / தலைமை ஆசிரியர் / மாவட்ட கல்வி அலுவலர் / முதன்மை கல்வி அலுவலர் / மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் / பதிவாளர் / தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் / கல்விநிறுவனத்தலைவர் / இயக்குநர் / தொழில்நுட்பக்கல்வி இயக்குநர் / கல்வி நிறுவனத்தின் இணை இயக்குநர் / பல்கலைக்கழகங்களின் பதிவாளரிடமிருந்து விண்ணப்பதாரர்களின் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள படிவத்தில், நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி வரையிலான ஒவ்வொரு கல்வித்தகுதிக்கும் சான்றிதழைப் பெற்று **இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்துப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

v. நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி வரையிலான அனைத்து கல்வித்தகுதிகளையும் தமிழ்வழிக் கல்வியில் பயின்றுள்ளார் என்பதற்கான ஆதாரச்சான்றினை **இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்துப் பதிவேற்றம் செய்யத் தவறும் பட்சத்தில் விண்ணப்பம் உரிய வழிமுறைகளை பின்பற்றி நிராகரிக்கப்படும்.**

vi. ஏதேனும் ஒரு பாடத்தை பகுதி நேரமாக படித்ததற்காகவோ / ஏதேனும் தேர்வினை தனித்தேர்வராக எழுதியதற்காகவோ, தனியர் தமிழ்வழிக்கல்வியில் பயின்றுள்ளார் என சான்றாவணம் ஏதேனும் சமர்ப்பித்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் விண்ணப்பம் உரிய வழிமுறைகளை பின்பற்றி நிராகரிக்கப்படும். (**மேலும் விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில் உள்ள பத்தி 14(R)-ஐ" காண்க**)

(C) இப்பதவிக்குரிய தெரிவு தொடர்பாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் ஏதேனும் வழக்குகள் நிலுவையில் இருப்பின், அவற்றின் மீதான இறுதி ஆணைகளுக்குட்பட்டு தற்காலிகமாக தெரிவு செய்யப்படும்.

(D) **தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 26 மற்றும் 27(இ)-இல்** குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆதரவற்ற விதவை மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீடு இந்த நியமனத்திற்குப் பொருந்தும்.

(E) நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் :

**அரசாணை (நிலை) எண்.51, மாற்றுத் திறனாளிகள் நலத் (DAP.3.2) துறை, நாள் 26.12.2017–இல்** அடையாளம் காணப்பட்டுள்ள அனைத்து குறைபாடுகள் கொண்ட தகுதியான விண்ணப்பதாரர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

(F) நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் விதி, 2017-ல் (மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல்துறை (Divyangjan), சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், இந்தியஅரசு) குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் படிவத்தில் அரசாணை (நிலை) எண்.28, மாற்றுத்திறனாளிகள் (DAP.3.1) நலத்துறை, நாள் 27.07.2018-ல், வரையறுக்கப்பட்டுள்ள சான்றிதழ் வழங்கக்கூடிய தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளிச் சான்றிதழை சமர்ப்பிக்கவேண்டும். (**விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி** 14(M)-ஐ **காண்க**).

(G) நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் காலிப்பணியிடங்களில் குறைந்தபட்சம் 30% பெண்களுக்கான ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த போதிய பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அதே வகுப்பினரை சார்ந்த தகுதிவாய்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும். **[தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 26 (5)-இல் குறிப்பிட்டுள்ளவாறு]**

(H) ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பப்பட்ட பிறகும், அவ்வகுப்பினர்களில் தகுதி வாய்ந்த

விண்ணப்பதாரர்களாக இருப்பின் அவ்விண்ணப்பதாரர்கள், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீட்டிற்கும் மதிப்பெண் தரவரிசைப்படி நிரப்பப்படுவர். அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில், அப்பணியிடங்கள் பிற ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களைக் கொண்டு நிரப்பப்படும். **[தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 27-இல் குறிப்பிட்டுள்ளவாறு ]**

(I) **இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட உரிமை கோரல்களுக்கான ஆவணச் சான்றுகளை இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பத்தில் தெரிவிக்கப்படாமல் பின்னர் கோரப்படும் எந்தவொரு மாற்றமும், கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படாது. குறிப்பிட்ட காலநேரத்திற்குள் ஆவணங்களை பதிவேற்றம் செய்யத் தவறினால் உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**

(J) கீழ்க்காணும் உண்மைகளை மறைக்கும்பட்சத்தில் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் உரிய வழிமுறையைப் பின்பற்றிய பிறகு நிராகரிக்கப்படும் மற்றும் விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தால் நிரந்தரமாகவோ அல்லது தக்கதென கருதப்படும் காலம் வரையில் விலக்கிவைக்கப்படுவர். (i) அரசு அல்லது மத்திய மாநில அரசின் கீழ் உள்ள நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், சட்டத்தின் வாயிலாக நிறுவப்பட்ட நிறுவனங்கள், அரசுத் துறை கழகங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றில் முறையாகவோ / தற்காலிகமாகவோ பணிபுரிந்து வருவது / பணிபுரிந்தது. (ii) குற்றவியல் நிகழ்வுகள், கைதானது, குற்றங்களுக்கான தண்டனை பெற்றது / விடுவிக்கப்பட்டது. (iii) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் / மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களினால் தேர்வு எழுதும் உரிமை இரத்து செய்யப்பட்டது அல்லது தகுதியற்றவராக அறிவிக்கப்பட்டது.

(K) கைது செய்யப்பட்டிருத்தல், குற்றத்தீர்ப்பு / குற்றமற்றவர் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டிருத்தல், வேலைக்கு ஆட்கள் தெரிவு செய்யும் ஏதேனும் ஒரு முகமையினால் தடை / தகுதியின்மை செய்யப்பட்டிருத்தல், குற்ற நடவடிக்கை (அல்லது) ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப்பட்டிருத்தல் / முடிவுற்றிருத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய சரியான மற்றும் உண்மையான தகவல்களை, விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், தீர்ப்பின் அசல் / ஆணை / அரசாணை/ துறை நடவடிக்கை கைவிடப்பட்ட அரசாணை அல்லது இதர ஆவணங்களை **இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.** மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர், நியமனம் பெறும் காலம் வரை எப்போது ஏற்பட்டிருப்பினும் உடனடியாக தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். தவறினால், தகுந்த தண்டனைக்குரிய நடவடிக்கையை தேர்வாணையம் மேற்கொள்ளும். (**விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி** 12-**ஐ காண்க**)

(L) **இடஒதுக்கீடு குறித்த தவறான தகவல்கள் / தகுதிக்கான காரணிகளான வயது**, **பாலினம்**, **வகுப்பு பிரிவுகள்**, **கல்வித் தகுதி**, **பயிற்று மொழி**, **உடற் தகுதி போன்ற அடிப்படைத் தகுதிகள் குறித்த தவறான தகவல் கொண்ட விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் உரிய வழிமுறைகளை பின்பற்றி நிராகரிக்கப்படும்**.

(M) நிரந்தரப்பதிவு என்பது எந்தவொரு பதவி **/** நியமனத்துக்கான விண்ணப்பமாக கருதப்பட மாட்டாது**.** விண்ணப்பதாரர்களால் நிரந்தரப்பதிவில் பொதுவான தகவல்கள் அளிக்கப்பட்டிருப்பினும் **இந்தத் தேர்வுக்குரிய விண்ணப்பத்தில் அளிக்கப்படும் விவரங்கள் / தகவல்கள் மட்டுமே இத்தேர்வுக்கு பரிசீலிக்கப்படும்.** இந்த நியமனத்திற்கான இணையவழி விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேவையான விவரங்கள் / தகவல்கள் தவறானதாக அல்லது முழுமை பெறாதவையாக இருந்தால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

(N) **திருநங்கைகளின் வகுப்பு நிர்ணயம்;**

i. எந்த ஒரு சாதிச் சான்றிதழும் இல்லாத திருநங்கை விண்ணப்பதாரர்கள் தங்களது இணையவழி விண்ணப்பத்தில் அரசாணை(நிலை) எண்.28, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்டவகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 06.04.2015-இன் படி, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினையோ அல்லது ஏனையோர் பிரிவினையோ தேர்வு செய்து கொள்ளலாம்.

ii. சாதிச்சான்றிதழ் வைத்துள்ள ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட (அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த திருநங்கை விண்ணப்பதாரர், அவர்களது சமூகத்தினைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுவர்.

iii. ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட(அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பைத் தவிர மற்ற வகுப்பினைச் சார்ந்த மற்றும் அப்பிரிவின் அடிப்படையில் சாதிச்சான்றிதழ் பெற்றுள்ள திருநங்கை விண்ணப்பதாரர், அவருடைய வகுப்பு (Class) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆகிய இரண்டு வகுப்புகளில், அவருக்கு சாதகமாக தோன்றுகின்ற ஒன்றை, ஒரு முறைப் பதிவின் போதே தேர்வு செய்ய வேண்டும். அதன்பிறகு, வகுப்பை எப்பொழுதும் மாற்ற இயலாது.

திருநங்கைகள் வகுப்பு நிர்ணயம் குறித்து அரசாணை நிலை எண்.90, சமூக நலம் மற்றும் சத்துணவுத் [SW8(2)] துறை, நாள் 22.12.2017 மற்றும் **விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி** 14F(vi)-(xi)-**ஐ காண்க**.

(O) **வேலைவாய்ப்பில் திருநங்கை விண்ணப்பதாரர்களுக்கான இட ஒதுக்கீடு:**

1. திருநங்கை விண்ணப்பதார்களில் பெண் என தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் விண்ணப்பதாரர் பெண்களுக்கான 30 சதவிகிதம் மற்றும் பொதுப்பிரிவினருக்கான 70 சதவிகிதம் (ஆண் மற்றும் பெண்) ஆகிய இரண்டு இட ஒதுக்கீட்டின் கீழும் கருதப்படுவர்.
2. திருநங்கை விண்ணப்பதாரர்களில் "ஆண்" அல்லது "மூன்றாம் பாலினத்தவர்" என தன்னை அடையாளப்படுத்திகொள்ளும் விண்ணப்பதாரர் பொதுப்பிரிவினருக்கான 70 சதவிகிதம் இட ஒதுக்கீட்டின் கீழ் (ஆண் மற்றும் பெண்) மட்டுமே கருதப்படுவர்.
3. தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தில் இருந்து பெறப்பட்ட திருநங்கைகள் / திருநங்கை ஆண் / திருநங்கை பெண் சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே மேற்குறிப்பிட்ட இட ஒதுக்கீடு பொருந்தும்.

(P) **பிணை:**

**தொழில் மற்றும் வர்த்தகத் துறையில் பண்டக காப்பாளர், நிலை – II** பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர், தொழில் மற்றும் வர்த்தகத் துறை இயக்குநரிடத்தில் பிணைத்தொகையாக ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) செலுத்த வேண்டும்.

## 14. ஏனைய முக்கிய அறிவுரைகள்:

a) **விண்ணப்பதாரர்கள் தேர்விற்கான தங்களுடைய தகுதிகளை உறுதி செய்தல்:** தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தரப்பட்டுள்ள அறிவுரைகளை நன்கு படித்த பின்னர் தாங்கள் அத்தேர்விற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளனரா என உறுதி செய்து கொள்ள வேண்டும். எழுத்துத்தேர்வு/ சான்றிதழ் சரிபார்ப்பு / நேர்முகத்தேர்வு / கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவது அல்லது தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக விண்ணப்பதாரரின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டுமே, ஒருவிண்ணப்பதாரர் பதவி நியமனம் பெற உரிமை அளிக்கப்பட்டவராகமாட்டார். எனவே, விண்ணப்பதாரரின் விண்ணப்பம், எல்லாநிலைகளிலும் தற்காலிகமானது மற்றும் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறு என்றாலோ தேர்வாணைய அறிவுரைகள் அல்லது விதிகள் மீறப்பட்டுள்ளன என்று கண்டறியப்படும்பட்சத்தில், எந்நிலையிலும், தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட, உரிய வழிமுறையைப் பின்பற்றி விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு. [**விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்**" **பத்தி** -11(B)(C) & (D) -**இல் உள்ளவாறு**].

b) தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு, தேர்வு எழுதுவதற்கான அனுமதிச்சீட்டுகள், **www.tnpscexams.in / www.tnpsc.gov.in** என்ற தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பதாரர் அவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். அனுமதிச்சீட்டு தனியாக அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது.

விண்ணப்பதாரர் தேர்வின் பொழுது அனுமதிச்சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிபந்தனையையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.[**விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி** -2 (V)(g)-**இல் உள்ளவாறு**].

c) தெளிவுரை வேண்டுவோர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தினை நேரில் அல்லது **1800 419 0958** என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலம், அனைத்து வேலை நாட்களிலும் முற்பகல் **10.00** மணி முதல் பிற்பகல் **5.45** மணி வரை தொடர்பு கொள்ளலாம். ஒருமுறை பதிவு மற்றும் இணையவழி விண்ணப்பம் குறித்த சந்தேகங்களுக்கு **helpdesk@tnpscexams.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் இதர சந்தேகங்களுக்கு **grievance.tnpsc@tn.gov.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பலாம்.
**[விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி-2(V)–இல் குறிப்பு (h)(i)(j)-இல் உள்ளவாறு].**

d) **விண்ணப்பதாரர்களுக்கான தகவல் பரிமாற்றம்**:
எழுத்துத் தேர்வு முடிவுகள் / சான்றிதழ் சரிபார்ப்பு / வாய்மொழித் தேர்வு / கலந்தாய்விற்கான நாள் மற்றும் நேரம் குறித்த தகவல்கள் ஏதும் விண்ணப்பதாரர்களுக்கு அஞ்சல் மூலமாக அனுப்பப்படமாட்டாது. இது குறித்த தகவல்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.

e) **விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட நாள் முதல் தெரிவு பணிகள் முழுவதுமாக முடிவு பெறும் நாள் வரை இந்த தெரிவு குறித்த தகவல்கள், விளக்கங்கள் எதுவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் உட்பட எந்த ஒரு மனுவிற்கும் தகவல் வழங்கப்படமாட்டாது.**

f) **கைப்பேசி மற்றும் இதர மின்னணு சாதனங்களுக்குத் தடை**:

1. விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்பட்ட எழுது பொருட்களான கருப்பு பந்துமுனை பேனா தவிர. மின்னணு சாதனங்களான தரவி (Blue Tooth) கைப்பேசி, நினைவூட்டு உள்கட்டமைப்புக் குறிப்புகள் அடங்கிய கைக்கடிகாரங்கள் மற்றும் மோதிரம் அல்லது ஏனைய மின்னணு சாதனங்கள், மின்னணு அல்லாத பதிவுக்கருவிகள், புத்தகங்கள், குறிப்புகள், கைப்பை வண்ண எழுது கோல், பென்சில் புத்தகங்கள், குறிப்புகள், தனித் தாள்கள், கணித மற்றும் வரைப்படக் கருவிகள், மடக்கை அட்டவணை, படியெடுக்கப்பட்ட வரைபடம், காட்சி வில்லைகள், பாடப்புத்தகங்கள் மற்றும் பொதுக் குறிப்புத் தாட்கள் மற்றும் பதிவுசெய்யும் தனிக்கருவிகளாகவோ மோதிரம் அல்லது கைக்கடிகாரத்தின் இணைப்பாகவோ கொண்டுவரக் கூடாது.
2. அவ்வாறான பொருட்களை வைத்திருப்போர் காணப்பட்டால் அவர்கள் தொடர்ந்து தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், அவர்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கியும் வைக்கப்படுவர். தேவைப்படின், அவ்விடத்திலேயே முழுச் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.
3. விண்ணப்பதாரர்கள் தங்கள் கைப்பேசி உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களை தேர்வுக்கூடத்திற்கு கொண்டுவர வேண்டாம் என அறிவுறுத்தப்படுவதுடன், அப்பொருட்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தர இயலாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(**மேலும் விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்** 17(E) **ஐ காண்க**)

g) தேர்வுக்கு விண்ணப்பிப்பவர்கள் அத்தேர்விற்கு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பெற்றவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களை தேர்வாணையம் ஐயமறத் தெரிந்து கொள்ளும்வரை அவர்களின் விண்ணப்பங்கள் எழுத்துத் தேர்விற்கு (அதாவது எல்லா நிலைகளிலும்) தற்காலிகமாக கருதப்படும். விண்ணப்பதாரர் தேர்விற்கு முன்போ அல்லது பின்னரோ நியமனத்திற்கு போட்டியிடத் தகுதியற்றவர் என்று தேர்வாணையத்தால் கண்டறியப்பட்டால், எந்நிலையிலும், அதாவது தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட உரிய வழிமுறையைப் பின்பற்றி விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை உண்டு.

h) தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறு எனக் கண்டறியப்பட்டால், உரிய வழிமுறைகளை பின்பற்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் அவ்விண்ணப்பதாரர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவும் நேரிடும்.

i) **ஒழுங்கீனச் செயல்களுக்குத் தடை:**
தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுதுதல் / பார்த்து எழுத அனுமதித்தல் அல்லது வேறு ஏதேனும் முறையற்ற உதவிகளைப் பெறவோ அல்லது பெற முயற்சிக்கவோ அல்லது அத்தகைய முறையற்ற உதவிகளைத் தரவோ அல்லது தர முயற்சிக்கவோ கூடாது.

j) **தேர்வுக் கூடத்தில் நடந்து கொள்ளும் முறை:**
தேர்வு எழுதும் எந்த ஒரு விண்ணப்பதாரரும் தேர்வுக் கூடத்தில் தவறான நடவடிக்கையிலோ (அல்லது) தேர்வினை சீர்குலைக்கும் நோக்கத்திலோ (அல்லது) தேர்வாணையத்தால் தேர்வினை நடத்த பணியில் அமர்த்தப்பட்டுள்ள அலுவலர் / பணியாளர்களை தாக்கும் முயற்சியிலோ ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபடும் விண்ணப்பதாரர்களின் செயல்கள் கடுமையான தவறாக கருதப்பட்டு, அவ்விண்ணப்பதாரர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

k) விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளை மீறும் பட்சத்தில் **விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி** 17(E)-**ன் படி** அல்லது தேர்வாணையம் பொருத்தமானதெனக் கருதும் தண்டனை விதிக்கப்படும்.

l) உத்தேச விடைகள் :
கொள்குறி வகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தேர்வு நடைபெற்ற நாளிலிருந்து **6 (ஆறு)** வேலை நாட்களுக்குள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும் தேர்வாணையத்தால் வெளியிடப்படும் கொள்குறிவகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தொடர்பாக முறையீடு செய்ய வேண்டுமானால் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள Answer Key Challenge என்ற சாளரத்தைப் பயன்படுத்தி முறையீடு செய்யலாம் (Result – > Answer keys)

விண்ணப்பதாரர்கள் கொள்குறிவகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தேர்வாணையத்தால் வெளியிடப்பட்ட **7** நாட்களுக்குள் இணையவழி வாயிலாக மட்டுமே முறையீடு செய்யவேண்டும். அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னஞ்சல் வழியாகவோ பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கான அறிவுரைகள் மற்றும் வழிமுறைகள் தேர்வாணைய இணையதளத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. மேலும் முறையீடு செய்ய இணையவழி மூலமாகவோ அல்லது வேறுவழியாகவோ வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் முடிவுற்ற நிலையில் பெறப்படும் எவ்வித முறையீடுகளும் பரிசீலிக்கப்படமாட்டாது.

இணையவழியில் உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளானது ஒவ்வொரு பாடத்திற்கென வல்லுநர்களை கொண்ட குழுவிற்கு பரிந்துரைக்கப்படும். மேலும், வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இறுதியான விடைகள் முடிவு செய்யப்பட்டு அதன்பின்னர் விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணியானது தொடங்கப்படும்.

தெரிவுப் பணிகள் முடிவடையும் வரை இறுதியான விடைகளை தேர்வாணையம் வெளியிடாது. தேர்வு நடைமுறைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர், அத்தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர் அனைவருடைய விவரங்களும் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.

[**மேலும் விவரங்களுக்கு " விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி** 17(D)(v)–(Xii)-**ஐ காண்க**]

## 15. விண்ணப்பிக்கும் முறை;

1. விண்ணப்பதாரர்கள் www.tnpsc.gov.in / www.tnpscexams.in ஆகிய தேர்வாணையத்தின் இணையதளங்கள் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

2. எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்கும் முன்பு ஆதார் எண் மூலம்ஒருமுறைப்பதிவு எனப்படும் நிரந்தரப்பதிவு (OTR) மற்றும் தன்விவரப்பக்கம் (Dashboard) ஆகியன

கட்டாயமாகும். விண்ணப்பதாரர்கள் நிரந்தர பதிவு மூலம் பதிவுக்கட்டணமாக ரூ.150/- ஐ செலுத்தி, பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒருமுறைப்பதிவு, பதிவு செய்த நாள் முதல் ஐந்தாண்டுகள் வரை நடைமுறையிலிருக்கும், தங்களுக்குரிய ஒரு முறைப் பதிவு கணக்கு (One Time Registration ID) மற்றும் கடவுச் சொல் மூலமாக மட்டுமே விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒருமுறைப்பதிவில் பதிவேற்றம்செய்ய, விண்ணப்பதாரர்கள் தங்களது புகைப்படம், கையொப்பம் ஆகியவற்றை CD/DVD/Pen drive போன்ற ஏதேனும் ஒன்றில் பதிவு செய்து தயாராக வைத்திருக்க வேண்டும்.

4. ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஒருமுறைப் பதிவுக் கணக்கை (One Time Registration ID) உருவாக்க அனுமதியில்லை.

5. விண்ணப்பதாரர்கள் தங்களுக்குரிய தனித்துவமான பதிவுக்கணக்கு மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி ஏற்கனவே பதிவிட்ட தங்களது விவரங்களை பார்வையிடவும், புதுப்பிக்கவும் செய்யலாம். தங்களது ஒருமுறைப் பதிவு , கடவு சொல்லினை வேறு நபரிடமோ (அ) முகவர்களிடமோ பகிர்ந்து கொள்ள கூடாது.

6. ஒருமுறைப்பதிவு என்பது எந்தவொரு பதவிக்கான விண்ணப்பம் அல்ல. இது விண்ணப்பதாரர்களின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கு தன்விவரப் பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே பயன்படும். எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், அறிவிக்கையில் "Apply" என்ற உள்ளீடு வழியே நிரந்தரப்பதிவுக்குரிய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உள்ளீடு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

7. விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் பதவியின் பெயரை தெரிவு செய்ய வேண்டும்.

**8.** புகைப்படம், குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் கையொப்பம் இல்லாமல் பதிவேற்றம் செய்யப்படும் இணையவழி விண்ணப்பம் உரிய வழிமுறைகளை பின்பற்றியப் பிறகு நிராகரிக்கப்படும்**.**

**9. இணையவழி விண்ணப்பத்தை திருத்தம் செய்தல்:**

இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான இறுதி தேதிக்குப் பிறகு, அறிவிக்கையின் பத்தி 4-ல் (முக்கியமான தேதி மற்றும் நேரம்) குறிப்பிட்டுள்ளபடி, இணைவழி விண்ணப்பத் திருத்த காலத்தில் விண்ணப்பதாரர்கள் தங்களது இணைவழி விண்ணப்பத்தை திருத்தம் செய்ய அனுமதிக்கப்படுவர். திருத்தம் செய்யும் காலத்தின் இறுதி தேதிக்குப் பிறகு, இணையவழி விண்ணப்பத்தில் எந்த மாற்றமும் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தாங்கள் இறுதியாக அளித்துள்ள விவரங்களின்படி விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். மேலும் இணையவழி விண்ணப்பத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களைத் திருத்தியதால் பிழைகள் ஏதேனும் ஏற்பட்டு விண்ணப்பம் நிராகரிப்பட்டால் தேர்வாணையம் பொறுப்பாகாது, இது விண்ணப்பதாரர்களின் பொறுப்பாகும். எந்தவொரு முறையிலும் இணையவழி விண்ணப்பத்தில் உள்ள உரிமைக் கோரல்களை மாற்றியமைப்பதற்காக தேர்வாணையத்திற்கு அனுப்பப்படும் கோரிக்கைகள் / மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**10. அச்சிடுதலில் விருப்பதேர்வு:**

i. விண்ணப்பத்தை இணைய வழியில் அனுப்பியபின், விண்ணப்பதாரர்கள் PDF முறையில் தங்கள் விண்ணப்பத்தை அச்சிட / சேமிக்க முடியும்.

ii. விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்ப நகல் தேவைப்பட்டால், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல்லை பயன்படுத்தி அச்சிட்டுக் கொள்ளலாம் / பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம்.

iii. இணையதள விண்ணப்ப அச்சுப்படி அல்லது வேறு எந்தவிதமான ஆதார ஆவணங்களையும் தேர்வாணையத்திற்கு அனுப்ப வேண்டாம்.

(**விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி** - 2–**இல் உள்ளவாறு**)

### 16. ஆவணங்கள் பதிவேற்றம்:

**I.** விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போது இணையவழி விண்ணப்பத்தில் தெரிவித்த அனைத்து உரிமை கோரல்களுக்கும் / விவரங்களுக்கும் ஆதாரமாக சான்றிதழ்கள் / ஆவணங்களை கட்டாயமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரர்களால் பதிவேற்றம் செய்த சான்றிதழ்களைத் தங்கள் ஒரு முறைப்பதிவின் மூலமாக சரிபார்க்கும் வசதி உள்ளது. ஏதேனும் சான்றிதழ் தவறாகப் பதிவேற்றப்பட்டாலோ அல்லது பதிவேற்றம் செய்யப்படாமல் விடுபட்டிருந்தாலோ அல்லது ஆவணங்களைப் பதிவேற்றுவதில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருந்தாலோ விண்ணப்பதாரர்கள், இப்பதவிக்கான தேர்வின் நுழைவுச் சீட்டு வழங்கும் நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வரை / தேர்வு நடைபெறுவதற்கு பன்னிரெண்டு நாட்களுக்கு முன்பு வரை ஆவணங்களைத் திருத்த மற்றும் மீள்பதிவேற்றம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். **(விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி-2-W–இல் உள்ளவாறு)**

**II. விண்ணப்பதாரர்களுக்கான தகவல்:**

எழுத்துத் தேர்வு முடிவுகள், சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு தொடர்பான தேதி மற்றும் நேரம் போன்ற தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது. அவ்விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும். இருப்பினும் விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண் / மின்னஞ்சலுக்கு சான்றிதழ் பதிவேற்றம், சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு ஆகியவற்றிற்கான தேதி மற்றும் நேரத்தை வழங்க தேர்வாணையம் கூடுதல் வசதியை செய்கிறது. அனைத்து புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் / தகவல்களுக்கு தேர்வாணைய இணையதளத்தை அவ்வப்போது பார்வையிடுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப சிக்கல்கள் உள்ளிட்ட காரணங்களால் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி / மின்னஞ்சல் சென்றடைவதில் / பெறுவதில் சிக்கல் / தாமதம் ஏற்பட்டால் / சென்றடைய தவறினாலும் தேர்வாணையம் அதற்கு பொறுப்பாகாது. குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் பெறாதது தொடர்பாக விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

### 17. விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்:

I. இணையவழி மூலம் **14.10.2022 அன்று இரவு 11.59 மணி வரை** விண்ணப்பிக்க / திருத்த இயலும். பின்னர் அச்சேவை நிறுத்தப்படும்.

II. இணையவழி விண்ணப்பத்தில் **19.10.2022 அன்று நள்ளிரவு 12.01 மணி முதல் 21.10.2022 அன்று இரவு 11.59 மணி வரை** திருத்தம் செய்யலாம். பின்னர் அச்சேவை நிறுத்தப்படும்.

III. இணைய வழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்த ஆவணங்கள் / சான்றிதழ்கள் மாற்ற / பதிவேற்ற / மீள்பதிவேற்றம் செய்ய **17.01.2023 அன்று இரவு 11.59 மணி வரை** அனுமதிக்கப்படுவர். பின்னர் அச்சேவை நிறுத்தப்படும்.

*(மேலும் கூடுதல் தகவல்களுக்கு தேர்வாணையத்தின் "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளை" தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in-இல் காணலாம்)*

**செயலாளர்**

## ஏற்றுக்கொள்ள மறுத்தல் (DISCLAIMER)

இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இணையதளத்தில் உள்ளன. எனினும், விண்ணப்பதாரர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் போது இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் இத்தேர்விற்கான விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலோ அல்லது அதற்கு முன்போ இணைக்கல்வி ஏதேனும் இருப்பின் அது குறித்த தகவலை விண்ணப்பத்தில் தெரிவித்தும்,மேலும் சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்யும் போது அவ்வரசாணைகளையும் சேர்த்து **இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.** இவ்வாறு செய்யத் தவறினால் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் உரிய வழிமுறையைப் பின்பற்றி நிராகரிக்கப்படும். இத்தேர்வின் விளம்பர அறிவிக்கை நாளிற்கு பின்பு வெளியிடப்பட்ட இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**செயலாளர்**

**<u>ANNEXURE – I / பிற்சேர்க்கை – I</u>**

**Syllabus**

**<u>Combined Civil Services Examination-III</u>**

**<u>Part - A</u>**

**கட்டாயத் தமிழ் மொழித் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு (கொள்குறிவகைத் தேர்வு) (பத்தாம் வகுப்புத் தரம்)**

**<u>பகுதி – அ</u>**

**<u>இலக்கணம்</u>**

1. பொருத்துதல் – பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல், புகழ் பெற்ற நூல், நூலாசிரியர்.
2. தொடரும் தொடர்பும் அறிதல் (i) இத்தொடரால் குறிக்கப்படும் சான்றோர் (ii) அடைமொழியால் குறிக்கப்படும் நூல்.
3. பிரித்தெழுதுக.
4. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்.
5. பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்.
6. பிழைதிருத்தம் - சந்திப்பிழையை நீக்குதல், ஒருமை பன்மை பிழைகளை நீக்குதல், மரபுப் பிழைகள், வழூஉச் சொற்களை நீக்குதல், பிறமொழிச் சொற்களை நீக்குதல்.
7. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.
8. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிதல்.
9. ஓரெழுத்து ஒரு மொழி உரிய பொருளைக் கண்டறிதல்.
10. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.
11. வேர்ச்சொல்லைக் கொடுத்து, வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயரை உருவாக்கல்.
12. அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்.
13. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குதல்.
14. பெயர்ச் சொல்லின் வகை அறிதல்.
15. இலக்கணக் குறிப்பறிதல்.
16. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.
17. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்.
18. தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல்.
19. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்.
20. எதுகை, மோனை, இயைபு இவற்றுள் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெழுதுதல்.
21. பழமொழிகள்.

## பகுதி-ஆ
## இலக்கியம்

1. திருக்குறள் தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், தொடரை நிரப்புதல் (இருபத்தைந்து அதிகாரம் மட்டும்)
   அன்பு, பண்பு, கல்வி, கேள்வி, அறிவு, அடக்கம், ஒழுக்கம், பொறை, நட்பு, வாய்மை, காலம், வலி, ஒப்புரவறிதல், செய்நன்றி, சான்றாண்மை, பெரியாரைத் துணைக் கோடல், பொருள்செயல்வகை, வினைத்திட்பம், இனியவை கூறல், ஊக்கமுடைமை, ஈகை, தெரிந்து செயல்வகை, இன்னா செய்யாமை, கூடா நட்பு, உழவு.

2. அறநூல்கள் – நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, முதுமொழிக் காஞ்சி, திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஔவையார் பாடல்கள் தொடர்பான செய்திகள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பிற செய்திகள்.

3. கம்பராமாயணம், இராவண காவியம் தொடர்பான செய்திகள், பாவகை, சிறந்த தொடர்கள்.

4. புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், அடிவரையறை, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் உள்ள பிற செய்திகள்.

5. சிலப்பதிகாரம்-மணிமேகலை தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், சிறந்த தொடர்கள், உட்பிரிவுகள் மற்றும் ஐம்பெரும்-ஐஞ்சிறுங் காப்பியங்கள் தொடர்பான செய்திகள்.

6. பெரியபுராணம் – நாலாயிர திவ்வியப்பிரபந்தம் – திருவிளையாடற் புராணம் – தேம்பாவணி – சீறாப்புராணம் தொடர்பான செய்திகள்.

7. சிற்றிலக்கியங்கள்:
   திருக்குற்றாலக்குறவஞ்சி – கலிங்கத்துப்பரணி – முத்தொள்ளாயிரம், தமிழ்விடு தூது – நந்திக்கலம்பகம் – முக்கூடற்பள்ளு – காவடிச்சிந்து - முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் - இராஜராஜ சோழன் உலா - தொடர்பான செய்திகள்.

8. மனோன்மணியம் - பாஞ்சாலி சபதம் – குயில் பாட்டு - இரட்டுற மொழிதல் (காளமேகப் புலவர்) - அழகிய சொக்கநாதர் தொடர்பான செய்திகள்.

9. நாட்டுப்புறப் பாட்டு - சித்தர் பாடல்கள் தொடர்பான செய்திகள்.

10. சமய முன்னோடிகள் – அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர், குலசேகர ஆழ்வார், ஆண்டாள், சீத்தலைச் சாத்தனார், எச்.ஏ.கிருட்டிணனார், உமறுப்புலவர் தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், சிறப்புப் பெயர்கள்.

## பகுதி-இ
## தமிழ் அறிஞர்களும், தமிழ்த் தொண்டும்

1. பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகனார் தொடர்பான செய்திகள், சிறந்த தொடர்கள், சிறப்புப் பெயர்கள்.

2. மரபுக் கவிதை - முடியரசன், வாணிதாசன், சுரதா, கண்ணதாசன், உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி தொடர்பான செய்திகள், அடைமொழிப் பெயர்கள்.

3. புதுக்கவிதை – ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, தருமு சிவராமு, பசுவய்யா, இரா.மீனாட்சி, சி.மணி, சிற்பி, மு.மேத்தா, ஈரோடு தமிழன்பன், அப்துல்ரகுமான், கலாப்ரியா, கல்யாண்ஜி, ஞானக்கூத்தன் – தொடர்பான செய்திகள், மேற்கோள்கள், சிறப்புத் தொடர்கள் மற்றும் எழுதிய நூல்கள்.

4. தமிழில் கடித இலக்கியம் – நாட்குறிப்பு, ஜவகர்லால் நேரு, மகாத்மா காந்தி, மு.வரதராசனார், பேரறிஞர் அண்ணா தொடர்பான செய்திகள்.

5. நிகழ்கலை (நாட்டுப்புறக் கலைகள்) தொடர்பான செய்திகள்.

6. தமிழில் சிறுகதைகள் தலைப்பு – ஆசிரியர் - பொருத்துதல்.

7. கலைகள் – சிற்பம் – ஓவியம் – பேச்சு - திரைப்படக்கலை தொடர்பான செய்திகள்.

8. தமிழின் தொன்மை - தமிழ்மொழியின் சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள்.

9. உரைநடை - மறைமலை அடிகள், பரிதிமாற்கலைஞர், ந.மு.வேங்கடசாமி நாட்டார், ரா.பி.சேது, திரு.வி.கல்யாண சுந்தரனார், வையாபுரி, பேரா.தனிநாயகம் அடிகள், செய்குதம்பி பாவலர் – மொழி நடை தொடர்பான செய்திகள்.

10. உ.வே.சாமிநாதர், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், சி.இலக்குவனார் – தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள்.

11. தேவநேயப்பாவாணர்-அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழ்த்தொண்டு தொடர்பான செய்திகள்.

12. ஜி.யு.போப் - வீரமாமுனிவர் தமிழ்த்தொண்டு சிறப்புத் தொடர்கள்.

13. தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்துராமலிங்கர் – அம்பேத்கர் – காமராசர் – ம.பொ.சிவஞானம் - காயிதேமில்லத் - சமுதாயத் தொண்டு.

14. தமிழகம் – ஊரும் பேரும், தோற்றம் மாற்றம் பற்றிய செய்திகள்.

15. உலகளாவிய தமிழர்கள் சிறப்பும் – பெருமையும் – தமிழ்ப் பணியும்.

16. தமிழ்மொழியின் அறிவியல் சிந்தனைகள் தொடர்பான செய்திகள்.

17. தமிழ் மகளிரின் சிறப்பு – மூவலூர் ராமாமிர்தம்மாள், டாக்டர் முத்துலட்சுமி அம்மையார், வேலு நாச்சியார் மற்றும் சாதனை மகளிர் - விடுதலைப் போராட்டத்தில் மகளிர் பங்கு - தில்லையாடி வள்ளியம்மை, ராணி மங்கம்மாள், அன்னி பெசன்ட் அம்மையார்.

18. தமிழர் வணிகம் – தொல்லியல் ஆய்வுகள் – கடற் பயணங்கள் – தொடர்பான செய்திகள்.

19. உணவே மருந்து – நோய் தீர்க்கும் மூலிகைகள் தொடர்பான செய்திகள்.

20. சமயப் பொதுமை உணர்த்திய தாயுமானவர், இராமலிங்க அடிகளார், திரு.வி.கல்யாண சுந்தரனார் தொடர்பான செய்திகள் – மேற்கோள்கள்.

21. நூலகம் பற்றிய செய்திகள்.

**Combined Civil Services Examination-III**

**GENERAL ENGLISH (SSLC Standard)**
**(Objective Type Examination)**

**[Only for Differently Abled Persons who avail exemption from appearing in கட்டாயத் தமிழ் மொழித் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு, as per orders in G.O.(Ms) No.49, Human Resources Management (M) Department, dated 23.05.2022]**

## Part-A
## Grammar

1. Match the following words and phrases given in Column A with their meanings in Column B.
2. Choose the correct 'Synonym' for the underlined word from the options given.
3. Choose the correct 'Antonym' for the underlined word from the options given.
4. Select the correct word (Prefix, Suffix).
5. Fill in the blanks with suitable Article.
6. Fill in the blanks with suitable Preposition.
7. Select the correct Question Tag.
8. Select the correct Tense.
9. Select the correct Voice.
10. Fill in the blanks (Infinitive, Gerund, Participle).
11. Identify the sentence pattern of the following sentence (Subject, Verb, Object...).
12. Fill in the blanks with correct Homophones.
13. Find out the Error (Articles, Preposition, Noun, Verb, Adjective, Adverb).
14. Select the correct sentence.
15. Find out the odd words (Verb, Noun, Adjective, Adverb).
16. Select the correct Plural forms.
17. Identify the sentence (Simple, Compound, Complex Sentence).
18. Identify the correct Degree.
19. Form a new word by blending the words.
20. Form compound words (eg.: Noun+Verb, Gerund+Noun).
21. British English – American English.

## Part-B
## Poetry

(a) Figures of Speech
(Alliteration – Simile – Metaphor – Personification – Onomatopoeia – Anaphora – Rhyme Scheme – Rhyming Words – Repetition, etc.)

(b) Poetry Appreciation

(c) Important Lines

**LIST OF POEMS**

1. **Life** - Henry Van Dyke
2. **I am Every Woman** - Rakhi Nariani Shirke
3. **The Secret of the Machines** - Rudyard Kipling
4. **The Ant and The Cricket** - Adapted from Aesop's fables
5. **No Men are Foreign** - James Falconer Kirkup
6. **The House on Elm Street** - Nadia Bush
7. **Stopping by Woods on a Snowy Evening** - Robert Frost
8. **A Poison Tree** - William Blake
9. **On Killing a Tree** - Gieve Patel
10. **The Spider and the Fly** - Mary Botham Howitt
11. **The River** - Caroline Ann Bowles
12. **The Comet** - Norman Littleford
13. **The Stick-together Families** - Edgar Albert Guest
14. **Special Hero** - Christina M. Kerschen
15. **Making Life Worth While** - George Elliot
16. **A Thing of Beauty** - John Keats
17. **Lessons in Life** - Brigette Bryant & Daniel Ho
18. **My Computer Needs a Break** - Shanthini Govindan
19. **Your Space** - David Bates
20. **Sea Fever** - John Masefield
21. **Courage** - Edgar Albert Guest
22. **Team Work** - Edgar Albert Guest
23. **From a Railway Carriage** - Robert Louis Stevenson
24. **Indian Seasons** - Nisha Dyrene
25. **A Tragic Story** - William Makepeace Thackeray

## Part-C
## Literary Works

### I. LIST OF PROSE

1. **His First Flight** - Liam O'Flaherty
2. **The Tempest** - Tales From Shakespeare
3. **The Last Lesson** - Alphonse Daudet
4. **The Little Hero of Holland** - Mary Mapes Dodge
5. **The Dying Detective** - Arthur Conan Doyle
6. **Learning the Game** (Book Extract) - Sachin Tendulkar
7. **The Cat and the Painkiller** (An Extract from The Adventures of Tom Sawyer) – Mark Twain
8. **Water – The Elixir of Life** - Sir C.V.Raman
9. **The Story of a Grizzly Cub** - William Temple Hornaday
10. **Sir Isaac Newton** - Nathaniel Hawthorne
11. **My Reminiscence** - Rabindranath Tagore
12. **The Woman on Platform 8** - Ruskin Bond
13. **The Nose Jewel** - C.Rajagopalachari
14. **A Birthday Letter** - Jawaharlal Nehru

### II. Biographies of -

Mahatma Gandhi - Jawaharlal Nehru - Subash Chandra Bose - Helen Keller - Kalpana Chawala - Dr.Salim Ali - Rani of Jhansi - Nelson Mandela – Abraham Lincoln

### III. General Comprehension

------------------------

**Combined Civil Services Examination-III**
**Part – B**

## General Studies (HSC Standard)
## (Topics for objective type)

1. **GENERAL SCIENCE**
   i. Nature of Universe –Measurement of Physical Quantities – General Scientific Laws in Motion –Force, Pressure and Energy – Everyday application of the basic principles of Mechanics, Electricity, Magnetism, Light, Sound, Heat and Nuclear Physics in our daily life.
   ii. Elements and Compounds, Acids, Bases, Salts, Petroleum Products, Fertilizers, Pesticides, Metallurgy and Food Adulterants.
   iii. Main concepts of Life Science, Classification of living organisms, Evolution,Genetics,Physiology,Nutrition, Health and Hygiene,Human diseases.
   iv. Environmental Science.

2. **CURRENT EVENTS**
   i. Latest diary of events – National symbols–Profile of states – Eminent personalities and places in news–Sports –Books and Authors.
   ii. Welfare Scheme of Government – Political parties and Political system in Tamil Nadu and India.
   iii. Latest inventions in Science and Technology – Geographical Land Marks – Current Socio – Economic issues.

3. **GEOGRAPHY**
   i. Earth Location – Physical Features – Monsoon, rainfall, weather and climate– Water resources–Rivers –Soil, Minerals and Natural resources– Forest and Wildlife–Agriculture pattern.
   ii. Transport– Communication.
   iii. Population density and distribution in Tamil Nadu and India.
   iv. Calamities–Disaster Management–Environment – Climate change.

4. **HISTORY AND CULTURE OF INDIA**
   i. Indus Valley Civilization –Guptas, Delhi Sultans, Mughals and Marathas – South Indian History.
   ii. Characteristics of Indian Culture, Unity in Diversity–Race, Language, Custom.
   iii. India as a Secular State.

5. **INDIAN POLITY**

i. Constitution of India–Preamble to the Constitution–Salient features of the Constitution–Union, State and Union Territory.
ii. Citizenship, Fundamental Rights, Fundamental Duties, Directive Principles of State Policy.
iii. Union Executive, Union Legislature–State Executive, State Legislature–Local Governments, Panchayat Raj.
iv. Spirit of Federalism: Centre-State Relationships.
v. Election–Judiciary in India–Rule of Law.
vi. Corruption in public life – Anti-Corruption measures – Lokpal and Lokayukta– Right to Information – Empowerment of Women – Consumer Protection Forums – Human Rights Charter.

6. **INDIAN ECONOMY**

i. Nature of Indian economy–Five year plan models – an assessment – Planning Commission and NitiAyog.
ii. Sources of revenue–Reserve Bank of India – Finance Commission– Resource sharing between Union and State Governments –Goods and Services Tax.
iii. Economic Trends – Employment Generation, Land Reforms and Agriculture – Application of Science and Technology in Agriculture – Industrial growth – Rural Welfare oriented programmes – Social Problems –Population, Education, Health, Employment, Poverty.

7. **INDIAN NATIONAL MOVEMENT**

i. National Renaissance –Early uprising against British Rule–Indian National Congress – Emergence of Leaders –B.R.Ambedkar, Bhagat Singh, Bharathiar, V.O.Chidambaranar, ThanthaiPeriyar, Jawaharlal Nehru, Rabindranath Tagore, Kamarajar, Mahatma Gandhi, MaulanaAbulKalam Azad, Rajaji, Subhash Chandra Bose, MuthulaksmiAmmaiyar, MuvalurRamamirtham and other National Leaders.
ii. Different modes of Agitation of Tamil Nadu and movements.

8. **HISTORY, CULTURE, HERITAGE AND SOCIO-POLITICAL MOVEMENTS OF TAMIL NADU**

i. History of Tamil Society, related Archaeological Discoveries, Tamil Literature from Sangam age till contemporary times.

ii. **Thirukkural**:

a) Significance as a Secular Literature.
b) Relevance to Everyday Life.
c) Impact of Thirukkural on Humanity.
d) Thirukkural and Universal Values – Equality, Humanism etc.
e) Relevance to Socio – Politico –Economic affairs.
f) Philosophical content in Thirukkural.

iii. Role of Tamil Nadu in freedom struggle – Early agitations against British Rule – Role of women in freedom struggle.

iv. Various Social reformers, Social reform movements and Social transformation of Tamil Nadu.

9. **DEVELOPMENT ADMINISTRATION IN TAMIL NADU**

i. Social Justice and Social Harmony as the Cornerstones of Socio-Economic Development.

ii. Education and Health systems in Tamil Nadu.

iii. Geography of Tamil Nadu and its impact on Economic growth.

10. **APTITUDE & MENTAL ABILITY TESTS**

i. Simplification–Percentage–Highest Common Factor (HCF)–Lowest Common Multiple (LCM).

ii. Ratio and Proportion.

iii. Simple Interest– Compound Interest–Area–Volume–Time and Work.

iv. Logical Reasoning – Puzzles – Dice–Visual Reasoning–Alpha Numeric Reasoning– Number Series.

**பொது அறிவு**
**(HSC Standard)**

**(கொள்குறி வினா வகைக்கான தலைப்புகள்)**

1. **பொது அறிவியல்**
   i. பேரண்டத்தின் இயல்பு – இயற்பியல் அளவுகளின் அளவீடுகள் – இயக்கவியலில் பொது அறிவியல் விதிகள் – விசை, அழுத்தம் மற்றும் ஆற்றல் – அன்றாட வாழ்வில் இயந்திரவியல், மின்னியல், காந்தவியல், ஒளி, ஒலி, வெப்பம் மற்றும் அணுக்கரு இயற்பியலின் அடிப்படை கோட்பாடுகளும் அதன் பயன்பாடுகளும்.
   ii. தனிமங்களும் சேர்மங்களும், அமிலங்கள், காரங்கள், உப்புகள், பெட்ரோலிய பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், உலோகவியல் மற்றும் உணவில் கலப்படம்.
   iii. உயிரியலின் முக்கியகோட்பாடுகள், உயிரினங்களின் வகைப்பாடு, பரிணாமம், மரபியல், உடலியல், ஊட்டச்சத்து, உடல் நலம் மற்றும் சுகாதாரம், மனிதநோய்கள்.
   iv. சுற்றுப்புறச் சூழல் அறிவியல்.

2. **நடப்பு நிகழ்வுகள்**
   i. அண்மை நிகழ்வுகளின் தொகுப்பு – தேசியச் சின்னங்கள் – மாநிலங்கள் குறித்த விவரங்கள் – செய்திகளில் இடம்பெற்ற சிறந்த ஆளுமைகளும் இடங்களும் – விளையாட்டு – நூல்களும் ஆசிரியர்களும்.
   ii. நலன் சார் அரசுத் திட்டங்கள் – தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் அரசியல் கட்சிகளும் மற்றும் ஆட்சியல் முறைகளும்.
   iii. அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் அண்மைக்கால கண்டுபிடிப்புகள் – புவியியல் அடையாளங்கள் – தற்போதைய சமூக பொருளாதார பிரச்சினைகள்.

3. **புவியியல்**
   i. புவி அமைவிடம் – இயற்கை அமைவுகள் – பருவமழை, மழைப் பொழிவு, வானிலை மற்றும் காலநிலை – நீர் வளங்கள் – ஆறுகள் – மண், கனிம வளங்கள் மற்றும் இயற்கை வளங்கள் – காடு மற்றும் வன உயிரினங்கள் – வேளாண் முறைகள்.
   ii. போக்குவரத்து – தகவல் தொடர்பு.
   iii. தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் மக்கள் தொகை அடர்த்தி மற்றும் பரவல்.
   iv. பேரிடர் – பேரிடர் மேலாண்மை – சுற்றுச்சூழல் – பருவநிலை மாற்றம்.

4. **<u>இந்தியாவின் வரலாறு மற்றும் பண்பாடு</u>**

   i. சிந்து சமவெளி நாகரிகம் – குப்தர்கள், தில்லி சுல்தான்கள், முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள் – தென் இந்திய வரலாறு .

   ii. இந்தியப் பண்பாட்டின் இயல்புகள், வேற்றுமையில் ஒற்றுமை – இனம், மொழி, வழக்காறு.

   iii. இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு.

5. **<u>இந்திய ஆட்சியியல்</u>**

   i. இந்திய அரசியலமைப்பு – அரசியலமைப்பின் முகவுரை – அரசியலமைப்பின் முக்கிய கூறுகள் – ஒன்றியம், மாநிலம் மற்றும் யூனியன் பிரேதசங்கள்.

   ii. குடியுரிமை, அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள்.

   iii. ஒன்றிய நிர்வாகம், ஒன்றிய நாடாளுமன்றம் – மாநில நிர்வாகம், மாநில சட்டமன்றம் – உள்ளாட்சி அமைப்புகள், பஞ்சாயத்து ராஜ்.

   iv. கூட்டாட்சியின் அடிப்படைத் தன்மைகள்: மத்திய – மாநில உறவுகள்.

   v. தேர்தல் – இந்திய நீதி அமைப்புகள் – சட்டத்தின் ஆட்சி.

   vi. பொது வாழ்வில் ஊழல் – ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் – லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா – தகவல் அறியும் உரிமை – பெண்களுக்கு அதிகாரமளித்தல் – நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் – மனித உரிமைகள் சாசனம்.

6. **<u>இந்தியப் பொருளாதாரம்</u>**

   i. இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள் – ஐந்தாண்டு திட்ட மாதிரிகள் – ஒரு மதிப்பீடு – திட்டக்குழு மற்றும் நிதி ஆயோக்.

   ii. வருவாய் ஆதாரங்கள் – இந்திய ரிசர்வ் வங்கி – நிதி ஆணையம் – மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான நிதிப் பகிர்வு – சரக்கு மற்றும் சேவை வரி.

   iii. பொருளாதார போக்குகள் – வேலைவாய்ப்பு உருவாக்கம், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் வேளாண்மை – வேளாண்மையில் அறிவியல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு – தொழில் வளர்ச்சி – ஊரக நலன்சார் திட்டங்கள் – சமூகப் பிரச்சினைகள் – மக்கள் தொகை, கல்வி, நலவாழ்வு, வேலை வாய்ப்பு, வறுமை.

7. **<u>இந்திய தேசிய இயக்கம்</u>**

   i. தேசிய மறுமலர்ச்சி – ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தொடக்க கால எழுச்சிகள் – இந்திய தேசிய காங்கிரஸ் – தலைவர்கள் உருவாதல் – பி.ஆர்.அம்பேத்கர், பகத்சிங், பாரதியார், வ.உ.சிதம்பரனார், தந்தை பெரியார், ஜவஹர்லால் நேரு, ரவீந்திரநாத் தாகூர், காமராசர், மகாத்மா காந்தி, மௌலானா அபுல் கலாம் ஆசாத், இராஜாஜி, சுபாஷ் சந்திர போஸ், முத்துலெட்சுமி அம்மையார், மூவலூர் இராமாமிர்தம் மற்றும் பல தேசத் தலைவர்கள்.

   ii. தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நிலைகள் மற்றும் இயக்கங்கள்.

8. **<u>தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள்</u>**

i. தமிழ் சமுதாய வரலாறு அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள், சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கியம்.

ii. **<u>திருக்குறள்</u>**:

(அ) மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம்.

(ஆ) அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை.

(இ) மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்.

(ஈ) திருக்குறளும் மாறாத விழுமியங்களும் – சமத்துவம், மனிதநேயம் முதலானவை.

(உ) சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு.

(ஊ) திருக்குறளின் தத்துவக் கோட்பாடுகள்.

iii. விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு – ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்க கால கிளர்ச்சிகள் – விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு.

iv. தமிழ்நாட்டின் பல்வேறு சீர்திருத்தவாதிகள், சீர்திருத்த இயக்கங்கள் மற்றும் மாற்றங்கள்.

9. **<u>தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம்</u>**

i. சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்.

ii. தமிழகத்தின் கல்வி மற்றும் நலவாழ்வு முறைமைகள்.

iii. தமிழகப் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்.

10. **<u>திறனறிவும் மனக்கணக்கு நுண்ணறிவும் (APTITUDE & MENTAL ABILITY)</u>**

i. சுருக்குதல் – விழுக்காடு – மீப்பெரு பொதுக் காரணி – மீச்சிறு பொது மடங்கு

ii. விகிதம் மற்றும் விகிதாச்சாரம்.

iii. தனி வட்டி – கூட்டு வட்டி – பரப்பு – கொள்ளளவு – காலம் மற்றும் வேலை.

iv. தருக்கக் காரணவியல் – புதிர்கள் – பகடை – காட்சிக் காரணவியல் – எண் எழுத்துக் காரணவியல் – எண் வரிசை.

**ANNEXURE–II / பிற்சேர்க்கை–II**

**List of Documents to be uploaded**

*(Not less than 200KB in PDF) (single or multiple page in 200 KB in PDF)*

| | |
|---|---|
| 1. | Educational / Preferential qualification:<br>• SSLC Mark Sheet<br>• The certificate of eligibility for College course of studies in the Madras, Madurai and Annamalai Universities issued by the Board of Secondary Education or by any other competent authority. |
| 2. | HSC Mark Sheet or its equivalent |
| 3. | • UG Degree / PG Degree / IPG Degree / M.Phil. / Ph.D., Certificates / Consolidated Mark Sheet<br>• Higher Diploma in Co-Operative Management |
| 4. | G.O. for Equivalence of qualification to the prescribed educational qualification (if applicable) |
| 5. | War Service Candidate (Necessary documents) (if applicable) |
| 6. | PSTM Certificate up to prescribed educational qualification of entire duration (If applicable) |
| 7. | Community Certificate |
| 8. | Differently Abled Certificate obtained from the Medical Board / Differently Abled book (if applicable) |
| 9. | Destitute Widow Certificate (if applicable) |
| 10. | Ex-Servicemen (if applicable) |
| 11. | Transgender ID Card with Gender (if applicable) |
| 12. | Gazetted copy for name change (if applicable) |
| 13. | No Objection Certificate (if applicable) |
| 14. | Documents / Court Orders proving Acquittal / Conviction or FIR in case of pending cases for Criminal cases registered.<br>(if applicable) |
| 15. | Other Documents (if any) |

For further details, refer para 2-W of 'Instructions to Applicants'.

APPENDIX-I

Certificate regarding physical limitation in an examinee to write

This is certify that I have examined Mr./Ms./Mrs.____________________________ __________________________________ (Name of the candidate with disability) a person with ________________________________ (Nature and percentage of disability as mentioned in the certificate of disability), S/o/D/o ________________________________________ a resident of _________________________ (Village / District / State and to state that He / She has physical limitation which hampers his / her writing capabilities owning to his / her disability.

Due to the above mentioned disability following concession may be given:-

1. Exemption from Tamil / Second Language.
2. Extra ________ hours for writing theory exam.
3. Allocation of a scribe.
4. Overlooking spelling mistakes and grammatical errors.
5. Using calculator / assistive devices
6. ____________________________________ (Any other assistive devices or concessions).

***strike out the non applicable.**

Signature
(Name of Government Hospital / Civil Surgeon / Medical Superintendent / Signature of the notified Medical Authority of a Government Health Care Institution)

Name & Designation

Name of Government Hospital / Health Care Centre / The Notified Medical Authority

Place:
Date:

Signature / Thumb impression
of the Differently Abled Person

(Photo of the Differently Abled Person and Stamp to be fixed here)

Note:
Certificate should be given by a specialist of the relevant stream / disability
(e.g. Visual Impairment – Ophthalmologist, Locomotor disability – Orthopedic Specialist / PMR etc.)

ANNEXURE-III/ **பிற்சேர்க்கை -III**

CERTIFICATE OF PHYSICAL FITNESS BY $\frac{\text{A SINGLE MEDICAL OFFICER}}{\text{THE CIVIL MEDICAL BOARD}}$

Signature of Candidate________________________________________

I/We do hereby certify that I/We have examined (full name) Thiru / Thirumathi / Selvan / Selvi _______________________________________ a Candidate ____________ for employment under the Government as __________ in the __________________________________ Office in the __________________________________________________ Department and whose signature is given above and cannot discover that he / she has any disease, communicable or otherwise, constitutional affliction or bodily infirmity / except that his / her weight is in excess of / below the standard prescribed, or except

I / We do not consider this a disqualification of the employment he / she seeks.

His / Her age is according to his / her own statement ________ years and by appearance about ___ / ___ years.

I/We also certify that he / she has marks of Small Pox / Vaccination.

Chest measurement in Inches

- On full Inspiration
- On full expiration
- Difference expansion

Height in ft.
Weight in kg.
Cardio–Vascular System
Respiratory System
His / Her vision is normal
Hypermetropic/ Myopic/ Astigmatic/
[Here enter the degree of defect and the strength of correction glasses]
Hearing is normal / defective (much or slight)
Urine - Does chemical examination show
(i) Albumen (ii) Sugar State specific gravity:
Personal marks (at least two should be mentioned) For Identification
1.
2.

SIGNATURE:
RANK:
DESIGNATION:

PRESIDENT:
Member (I)
(II)

STATION:
DATE:

STATION:
DATE:

The candidate must make the statement required below prior to his / her Medical Examination and must sign the declaration appended thereto. His attention is specially directed to the warning contained in the note below:-

1. State your name in full:

2. State your age and birth place:

3. (a) Have you ever had small pox, intermittent or any other fever, enlargement or suppuration of glands spitting of blood, asthma, inflammation of lungs, heart disease, fainting attacks, rheumatism, appendicitis?

OR

(b) any other disease or accident requiring confinement to bed and medical or surgical treatment?

4. When, where your last vaccinated

5. Have you or any of your near relations been afflicted with consumption, serefula gout, asthma, fits, epilepsy or insanity?

6. Have you suffered from any form of nervousness due to over work or any other cause?

7. Furnish the following particulars concerning your family:

| Father's age, if living and state of health | Father's age at death and cause of death | No. of brothers living, their ages, state of health | No. of brothers dead, their ages at and cause of death |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | |

| Mother's age, if living and state of health | Mother's age at death and cause of death | No. of Sisters living, their ages and state of health | No. of Sisters dead, their ages at and cause of death |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | |

I declare all the above answers to be to the best of my belief, true and correct.

CANDIDATE'S SIGNATURE

Note:- The candidate will be held responsible for the accuracy of the above statement by willfully suppressing any information he will incur the risk of losing the appointment and if appointed, of forfeiting all claim to superannuation allowance or gratuity.

MedI. I-68.

**<u>பிற்சேர்க்கை –IV</u>**

**தெரிவு முறை குறித்த உத்தேச கால அட்டவணை**

| வ. எண். | நிகழ்வு | கால வரிசை |
|---|---|---|
| **1.** | இணையவழி விண்ணப்பத்தினை விண்ணப்பிக்க விண்ணப்பத்திலுள்ள விவரங்களைத் திருத்த / கட்டணம் செலுத்த இறுதி நாள் | **14.10.2022** |
| **2.** | இணையவழி விண்ணப்பத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான காலம் | **19.10.2022 நள்ளிரவு 12.01 மணி முதல் 21.10.2022 இரவு 11.59 மணி வரை** |
| **3.** | சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய / மாற்ற / மீள் பதிவேற்றம் செய்ய இறுதி நாள் | **17.01.2023** |
| **4.** | எழுத்துத் தேர்வு முடிவு வெளியீடு | **மே 2023** |
| **5.** | சான்றிதழ் சரிபார்ப்பு / கலந்தாய்வு | **ஜூன் 2023** |

**செயலாளர்**